செ.வெ.எண்.44 நாள்: 28.04.2019

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெறுவதை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு இன்று (28.04.2019) நடைபெற்றது. கோவில்பட்டி நாடார் மேல்நிலைப்பள்ளியிலும், எட்டயபுரம் சி.கே.டி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் மே 19ம் தேதி ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நமது மாவட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற பொது தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் பணியாற்றும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்பட்டது. தற்போது நடைபெறவுள்ள ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

வாக்குப்பதிவு நாளில் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்னதாக குறைந்தபட்சம் 50 மாதிரி வாக்குகள் பதிவு செய்ய வேண்டும். பின்னர் மாதிரி வாக்குப்பதிவுகளை தவறாமல் அழிக்க வேண்டும். வாக்குப்பதிவு தலைமை அலுவலர்கள் டைரி, 17 ஏ, 17 சி, மாதிரி வாக்குப்பதிவிற்கான சான்றிதழ்கள் சரியாக பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலும் மாதிரி வாக்குப்பதிவிற்கான சான்றிதழில் வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் தங்களது கையொப்பம் இருக்க வேண்டும். வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பாக Total Button-ஐ அழுத்தி வாக்குகள் பதிவாகி இருந்ததாக கண்டறியப்பட்டால் பதிவான வாக்குகளை அழிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களை மட்டுமே வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். பூத் சிலிப் இல்லாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள ஆவணங்களை காண்பித்து வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். வாக்குப்பதிவு நடைபெறும்போது Close Button-ஐ ஒரு போதும் அழுத்தக்கூடாது. வாக்குப்பதிவு முடிவடைந்தபின் தவறாமல் Close Button-ஐ அழுத்தி சீல் வைக்க வேண்டும். வேட்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை மட்டும் வாக்குப்பதிவு மையங்களில் அனுமதிக்க வேண்டும். இதனை வாக்குசாவடி தலைமை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். வாக்குசாவடி மையத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை பின்பற்றி பணியாற்ற வேண்டும். மாலை 6 மணிக்கு மேல் வரிசையில் நிற்கும் வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கி வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

பயிற்சி வகுப்பில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் உடனடியாக கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். வாக்குச்சாவடி முகவர்கள் கேட்கும் சிறு சந்தேகங்களுக்கும் தெளிவான பதில் அளிக்கும் வகையில் அனைத்து செயல்களையும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு சிறு தவறுகள் கூட நிகழாத வண்ணம் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி சிறப்பாக பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் மே 19ம் தேதி ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நடைபெறவுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்வதற்கு 29.04.2019 அன்று கடைசி நாள் ஆகும். இதுவரை 13 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இன்று நடைபெற்ற பயிற்சி வகுப்பினை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள். தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை கண்காணிக்க பறக்கும் படை குழுக்கள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் என 90 குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். வேட்பாளர்களின் பட்டியல் இறுதியானவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர்களின் புகைப்படம், சின்னம் ஆகியவை பொறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள், பணம் விநியோகம் செய்யப்படுகிறதா என்பதை பறக்கும் படை குழுக்கள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.அமுதா, ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.சுகுமார், வட்டாட்சியர்கள் திரு.மலர்தேவன் (ஓட்டப்பிடாரம்), திரு.லிங்கராஜ் (கயத்தார்), திரு.பரமசிவம் (கோவில்பட்டி) மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.